DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 225 of 2024 |
| Deposition of witness for | : | PW4 |
| Name | : | ஜெயவேல் |
| Father's Name | : | முனிராஜ் |
| Village | : | லக்கபெத்தனப்பள்ளி |
| Taluk | : | கிருஷ்ணகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | விவசாயம் |
| Age | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 24th day of July 2025.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :–</u>

நான் தற்போது லக்கபெத்தனப்பள்ளி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். விபத்தில் இறந்த போன சண்முகம் எனது மாமா ஆவார். கடந்த 30.12.2019 அன்று மாலை 07.00 மணிக்கு எங்கள் ஊரிலிருந்து நெடுஞ்சாலைக்கு செல்ல இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது, சென்னசத்திரம் நெடுஞ்சாலை ரோட்டில் விபத்து ஏற்பட்டது. எனது மாமா எங்கள் ஊரிலிருந்து நெடுஞ்சாலை வழியாக நல்லூர் சென்றிருந்தார். அவர் Hyundai I 10 காரில் சென்றிருந்தார். மொத்தம் 4 பேர் சென்றிருந்தார்கள். அப்போது நெடுஞ்சாலையிலிருந்து குருபரப்பள்ளி நோக்கி வந்த கார் எங்கள் மாமா வந்த காரின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. நான் பார்த்து உறவினர்களுக்கு போன் செய்து வந்து விட்டார்கள். எனது மாமாவிற்கு வலது பக்க தோள் பட்டை, இடது கை உடைந்து விட்டது. கந்தன் என்பவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. மற்ற இரண்டு நபர்களுக்க உடல் முழுவதும் இரத்த காயம் ஏற்பட்டது. ஆம்புலன்ஸ் வந்தது, உறவினர்களும் வந்து விட்டனர். கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். மருத்துவமனையில் மருத்துவர் எனது

மாமாவை பரிசோதனை செய்து அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக கூறினார். எதிரே வந்த கார் மோதிவிட்டது. ஆஜர் எதிரி தான் இவ்விபத்தை ஏற்படுத்திய நபர் ஆவார். இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

நான் உள்ளுர் காரர் என்பதால் ரோடு எப்படி இருக்கிறது, வளைவு எங்கெங்கு உள்ளது என்று தெரியும் என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் சென்னசந்திரம் பஸ்டாப் என்றால் கொஞ்சம் தோராயமாக 50 அடி தள்ளி இருக்கும். பஸ்டாப் அருகே இருப்பதால் ஆள் நடமாட்டம் அதிகம் இருக்கும் என்றால் அவ்வளவாக இருக்காது. அந்த சாலையில் இடது பக்கத்தில் ரோடு ஓரமாக தென்னை மரங்கள் உள்ளது என்றால் சரிதான். ரோடிற்கும் தென்னை மரத்திற்கும் 5 அடி தூரம் இடைவெளி இருக்குமா என்றால் 10 அடி தூரம் இருக்கும். சம்பவம் நடந்த நேரம் இரவு 07.00 மணி என்பதால் இருட்டாக இருக்கும் என்றால் சரிதான். விபத்து ஏற்பட்டு கால் மணி நேரத்தில் அந்த இடத்திற்கு சென்று விட்டேனா என்றால் இருக்கலாம், கால்மணி நேரத்திற்கு முன்பே இருக்கும், நான் போவதற்குள் விழுந்து விட்டார், ஆட்களும் வந்து விட்டார்கள். நான் போவதற்குள் 4, 5 நபர்கள் இருந்திருப்பார்கள். அடிபட்ட நபர்களை பார்த்துக் கொண்டிருந்தார்கள். நானும் போய் விட்டேன். சண்முகம் என்பவர் எனது அத்தை மகன் ஆவார். விபத்து நடந்த பகுதி வளைவான பகுதி என்றால் சரிதான். வளைவானது நடுச்சாலையில் இருந்து குப்பச்சி பாறை வழியில் தான் வளைந்துள்ளது என்றால் சரிதான். குப்பச்சி பாறையில் இருந்து நெடுஞ்சாலை செல்லும் போது, வளைவில் வேகமாக வந்தால் வலது பக்கம் போய் தான் திரும்ப வேண்டும் என்றால் சரிதான். நெடுஞ்சாலையிலிருந்து குப்பச்சி பாறை செல்லும் நபர்கள் இடது பக்கம் தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். விபத்தை பார்த்து நான் தான் அவரின் மனைவி புவனேஸ்வரிக்கு தகவல் சொன்னேன். அடிபட்டவர்கள் அங்கிருக்கும் போதே புவனேஸ்வரி அந்த இடத்திற்கு வந்து விட்டார் என்றால் இல்லை. எவ்வாறு அடிபட்டது என்ற தகவலை அங்கிருந்தவர்கள் என்னிடம் சொன்னார்கள். அங்கிருந்தவர்கள் எனக்கு தெரிந்தவர்கள் என்றால் இல்லை. எனக்கு யாரும் போன் செய்யவில்லை. அந்த வழியாக செல்லும் போது பார்த்தேன். எனது மாமா சண்முகம் அவரின் சகோதரியை பார்க்க நெல்லூர் சென்றதாக யார் சொன்னார்கள் என்றால் நான் அப்போது ஊரில் தான் இருந்தேன். நானும் மருத்துவமனை சென்றேனா என்றால் சென்றேன். நான் மருத்துவமனை செல்லும் போது இரவு 08.00 – 09.00 மணி இருக்கும். இந்த விபத்து குறித்து புவனேஸ்வரி

தான் புகார் கொடுத்தார். நான் அரசு மருத்துவமனைக்கு சென்று விட்டேன், புவனேஸ்வரிதான் காவல் நிலையத்திற்கு சென்றார். மருத்துவமனைக்கு சென்று விட்டு அதன்பிறகு காவல் நிலையம் 10.00 மணிக்கு மேல் சென்றேன். நான் செல்வதற்கு முன்பே புகார் கொடுத்து விட்டார். புகார் கொடுத்த பொழுது நாகேந்திரன், குமார், பாலகிருஷ்ணன், சிதம்பரம் எல்லோரும் சென்றார்கள். போஸ்ட்மாட்டத்திற்கு அனுப்புவதற்கு கையெழுத்து போடுவதற்காக காவல் நிலையம் அழைத்தார்கள், சென்றேன். காவல் நிலையத்தில் தான் எல்லோரும் கையொப்பம் போட்டோம் என்றால் சரிதான். நான் பார்க்காத விபத்தை பார்த்ததாக என் மாமாவிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை :-</u>

இல்லை.

M SANTHI
CHIEF JUDICIAL MAGISTRATE,KRISHNAGIRI
Digitally signed by M SANTHI

தலைமை குற்றவியல் நடுவர்,
கிருஷ்ணகிரி.